(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 2(2).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2019 மே 10 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2019 மே 21, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மோட்டார் வாகனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2019 யூன் 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

23/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில், வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவில், அம்பேவில சந்தியிலிருந்து ரங்வல ஊடாக செல்கின்ற உடவெல வீதியானது பல வருட காலமாக திருத்தப்படாமையின் காரணமாக கடுமையாகச் சேதமடைந்துள்ள தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதி உரித்தாகும் நிறுவனம் யாது;

(ii) மேற்படி வீதியை போக்குவரத்துக்கு உகந்த வகையில் திருத்தியமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், திருத்தியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது;

(iv) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

(v) தற்போது மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

76/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 மே மாதம் இடம்பெற்ற திடீர் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) பாதிக்கப்பட்ட குடியிருப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஒதுக்கிய தொகை எவ்வளவென்பதையும்;

(v) இழப்பீடாக செலுத்தப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(vi) இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(vii) இற்றைவரையில் இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்படாத குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(viii) இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை எவ்வளவென்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

134/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பகிரங்க அரங்காட்டுகைச் சபையிலிருந்த அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் சேவைக் கால எல்லைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு காலப்பகுதியிலும் காட்சிப்படுத்தும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட சிங்களத் திரைப்படங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு காலப்பகுதியிலும் தணிக்கைக்கு உள்ளான சிங்களத் திரைப்படங்கள் மற்றும் அவற்றின் இயக்குநர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) குறிப்பிட்ட திரைப்படங்களைத் தணிக்கை செய்யும் பொருட்டு பகிரங்க அரங்காட்டுகைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் தணிக்கைகளற்ற தரமான சிங்களத் திரைப்படக் கலையை உருவாக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

219/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிலைபோசெட்டை தடைசெய்ய அரசாங்கம் முடிவுசெய்த திகதி யாது;

(ii) அதில் தாக்கம் செலுத்திய விடயங்கள் யாவை;

(iii) மேற்படி தடைக்கென சிபாரிசுகளை முன்வைத்த நிபுணர் அமைப்புக்கள் அல்லது நபர்கள் யாவர்;

(iv) கிலைபோசெட் தடையை நீக்க அரசாங்கம் முடிவு செய்த திகதி யாது என்பதையும்;

(v) அதில் தாக்கம் செலுத்திய விடங்கள் யாவை;

(vi) தடையை நீக்குவதற்கென சிபாரிசுகளை முன்வைத்த நிபுணர் அமைப்புக்கள் அல்லது நபர்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

240/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மகாவலி கங்கையில் மணல் அகழ்வுக்காக வில்கமுவ பிரதேச செயலகத்தினால் அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நபர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி அனுமதிப்பத்திரங்கள் வழங்கியமை காரணமாக வில்கமுவ பிரதேசத்தில் மகாவலி நதிக்கு பாரிய சுற்றாடல்சார் பாதிப்பு ஏற்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பாதிப்பை நிறுத்த அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

255/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அனுராதபுரம் மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

335/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின் பெருமளவிலான கிராமிய வீதிகள் பழுதடைந்துள்ளதன் காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ்வீதிகளைத் துரிதமாக மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

381/ '18

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது 106 ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கை சாரணியர் இயக்கத்தில் 75000 இற்கு மேற்பட்ட சிறுவர்களும் சிறுமியர்களும் சேவை வழங்குகின்றார்கள் என்பதையும்;

(ii) சாரணியர்களின் "வேலை வாரம்" நிகழ்வின் மூலம் வருடாந்தம் ஈட்டிக்கொள்ளப்பட்டு சாரணியர் தலைமையகத்திற்கு கிடைக்கின்ற ரூபா 8 மில்லியன் பணத்தொகை கடந்த ஐந்து வருடங்களில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமல் செலவு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) தலைமை அலுவலகக் கட்டிடத்தை நிருமாணிக்கும் போது சாரணியர் குழு அங்கத்தவர்களின் அனுமதியின்றி முன்னாள் தலைமை சாரணியர் ஆணையாளர் திரு. நிமல் த சில்வா தனது நட்புக்குரியதொரு கம்பனிக்கு மதியுரைக் கட்டணமாக ரூபா 8 மில்லியன் பணத் தொகையையும் உரியமுறையில் நிருமாணிக்கப்படாத கட்டிடத்திற்கு ரூபா 14 மில்லியனையும் செலுத்தியுள்ளாரென்பதையும்;

(iv) சாரணியர் "வேலை வாரம்" நிகழ்வின் மூலம் ஈட்டிக்கொள்ளப்படுகின்ற பணத்தை பயன்படுத்தி வனப் பேணுகை திணைக்களத்தின் உரிய அனுமதியின்றி நுவரெலியா பிரதேசத்தில் சாரணியர் முகாமொன்றிற்காக நிருமாணிக்கப்பட்ட சீமெந்து கூடங்கள் தடைசெய்யப்பட்டதன் விளைவாக பெருந்தொகையான நிதிசார் நட்டம் எற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இந்நிதியினை தவறாகப் பயன்படுத்தியமை சம்பந்தமாக முறையானதொரு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதன் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) இல்லையெனில், எதிர்வரும் காலத்தில் இவ்விடயம் சம்பந்தமாக முழுமையான விசாரணையொன்று நடாத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

490/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்ககளின் முகவரிகள் யாவை;

(iii) அந்த எரிபொருள் நிலையங்களில் கூட்டுத்தாபனத்துக்குரிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் IOC கம்பனிக்குரிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வெவ்வேறாக யாவை;

(iv) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கண்டி மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(v) அந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொண்ட நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(vi) அவ்வாறு அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் மூலம் கூட்டுத்தாபனம் ஈட்டிய பணம் எவ்வளவு:

(vii) அவ்வாறு எரிபொருள் நிலைய அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது கூட்டுத்ததபானம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் அளவுகோல்கள் யாவை;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

536/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) தேசிய லொத்தர் சபையினால் மஹஜன சம்பத 'ரஜ தினும' எனும் பெயரில் லொத்தர் சீட்டிழுப்பொன்று நடத்தப்படுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி லொத்தரின் 3328 வது சீட்டிழுப்பின் மூலமாக புத்தம்புதிய ஹைபிரிட் மோட்டார் வாகனமொன்று வழங்கப்படுவதாக தேசிய லொத்தர் சபையினால் பிரச்சார அறிவித்தலொன்று வெளியிடப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி சீட்டிழுப்பில் உடுதும்பற, மடுகல்ல, கலமுனவில் வதியும் திரு. கே.டபிள்யு.ஜீ.பீ. கப்புகொட்டுவ மோட்டார் வாகனத்தை வென்றெடுத்தார் என்பதையும்;

(iv) மேற்படி மோட்டார் வாகனம் 2017.01.25 ஆம் திகதி இலங்கை ரூபவாஹிணி கூட்டுத்தாபன வளவில் வைத்து திரு. கப்புகொட்டுவவுக்கு கையளிக்கப் பட்டதென்பதையும்;

(v) வாகனத்தின் பதிவுச்சான்றிதழை பரிசீலிக்கையில் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது புதிய (Brand New) மோட்டார் வாகனமல்லவென்பதையும் பாவித்து பழுதுபார்க்கப்பட்ட (Reconditioned) மோட்டார் வாகனமென்பதையும்;

(vi) இது சம்பந்தமாக தேசிய லொத்தர் சபைக்கு முறைப்பாடு செய்தபோதிலும் எவ்விதமான பதிலும் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இது சம்பந்தமாக விசாரணையொன்றை மேற்கொண்டு இந்த மோசடியை புரிந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

(ii) திரு. கப்புகொட்டுவவுக்கு புதிய மோட்டார் வாகனமொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில் அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

565/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'கொவிசெத' லொத்தர்ச் சீட்டு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி லொத்தர் சீட்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை அதனைச் சந்தைப்படுத்தி ஆண்டுதோறும் ஈட்டிய வருமானம் வெவ்வேறாக யாது எபதையும்;

(iv) இவ்வருமானத்தில் பரிசாக வழங்கப்பட்ட தொகை வருடாந்தம் எவ்வளவு என்பதையும்;

(v) விவசாய மக்களின் நலனோம்புகைக்கு செலவு செய்யப்பட்ட தொகை யாதென்பதையும்;

(vi) எதிர் காலத்தில் விவசாயிகளின் நலனுக்காக அதிகமான தொகையை செலவிட அமைச்சு எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

591/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 290 இற்கமைய, பட்டியலிடப்பட்ட ஆதன வியாபார நம்பிக்கைப் பொறுப்பொன்று (Real Estate Trusts) தாபிக்கப்பட்டதா; இன்றேல், ஏன் என்பதையும்;

(ii) அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பொன்றை ஆரம்பிப்பதற்கான ஆரம்பப் பணிகள் பற்றிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட தரப்பினர் யாவரென்பதையும்;

(iii) பட்டியலிடப்பட்ட அலகு நம்பிக்கைப் பொறுப்பொன்று தாபிக்கப்படாமலே, அரசாங்க காணிகள் பாரிய அளவிலான வீடமைப்புக் கருத்திட்டங்களுக்காக தனியார் தொழில்முயற்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான நிபந்தனைகள் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(v) அரசாங்க காணிகள், பாரிய அளவிலான வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக தனியார் தொழில்முயற்சியாளர்களுக்கு ஒப்படைக்கப் படுகையில், அதற்கு உரியவாறு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், தனியார் தொழில்முயற்சியாளர்களை தெரிவுசெய்யும் போது பின்பற்றப்படுகின்ற முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

679/ '18

கௌரவ கனக ஹேரத்,— மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பழைய பெருந்தோட்ட வீடுகளுக்குப் (லயன் அறைகள்) பதிலாக புதிய வீடுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இற்றைவரை வீடுகள் வழங்கப்படாத பெருந்தோட்டக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீடுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கேற்ப கேகாலை மாவட்டத்தில் வீடுகள் வழங்கப்படவேண்டிய பெருந்தோட்டக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இற்றைவரை வீடுகள் வழங்கப்பட்டுள்ள பெருந்தோட்டக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) வீடுகள் வழங்கப்படாத பெருந்தோட்டக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஒரு பெருந்தோட்ட வீட்டில் (லயன் அறையில்) தற்போது எத்தனை குடும்பங்கள் ஒன்றாக வாழ்கின்றார்கள் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், புதிய வீடுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை துரிதமாக்குவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எப்போது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

693/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.07.31 ஆம் திகதியளவில் அரசாங்கத்தின் பத்து இலட்சம் தொழில்வாய்ப்புக்கள் கருத்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொடுக்கப்பட்ட மொத்த தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்திற்கமைய தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

759/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் சிறுநீரக நோயாளர்கள் உள்ள குடும்பங்களின் வீடுகளை திருத்துவதற்கு உதவித் தொகை வழங்கப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அனுகூலத்தை பெற விண்ணப்பிப்பதற்கு தேவையான தகைமைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களும் யாவை என்பதையும்;

(iii) அதன் கீழ் வீடொன்றை திருத்துவதற்கு வழங்கப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இதுவரையில் மேற்படி வீடமைப்பு உதவித் தொகையை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பதாரிகளுள் வீடமைப்பு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய எவ்வளவு என்பதையும்;

(iii) தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் அத் தொகை வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) திருத்துமளவுக்குக் கூட வீடு இல்லாத, குடிசைகளில் வசிக்கின்ற சிறுநீரக நோயாளர்களும் காணப்படுவதால், இவர்களுக்கு வீடொன்றை அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 யூன் 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

29/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ஈட்டப்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அதில் தற்போது காணப்படுகின்ற மூலதனத் தொகை மற்றும் ஒதுக்குத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள குறுகிய காலக் கடன், வங்கி மேலதிகப்பற்று, நடுத்தரகால மற்றும் நீண்டகாலக் கடன்கள் என்பவற்றின் மொத்தக் கூட்டுத்தொகை யாதென்பதையும்;

(iv) அதிகாரசபையினால் கடந்த அரசாங்கத்தினதும் தற்போதைய அரசாங்கத்தினதும் கீழ் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் பயனுகரிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் எதிர்காலத்தில் நடைமுறைபடுத்தப் படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

80/ '18

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் மாதாந்த நுகர்வுக்கு தேவையான முட்டைகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) உள்நாட்டு மாதாந்த முட்டை உற்பத்தியின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு எந்தந்த நாடுகளிலிருந்து முட்டை இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) மாதாந்தம் இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கையிலிருந்து எந்தந்த நாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்பதையும்;

(iv) மாதாந்தம் ஏற்றுமதி செய்யப்படும் முட்டைகளின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) முட்டைகள் உற்பத்தி செய்யப்படும் கோழிப் பண்ணைகள் அதிகளவில் வியாபித்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) முட்டையொன்றின் உற்பத்திச் செலவு எவ்வளவென்பதையும்;

(iii) இன்றளவில் சந்தையில் முட்டையொன்றின் மொத்த விலை எவ்வளவென்பதையும்;

(iv) முட்டைகள் உற்பத்திக்கும் விற்பனைக்கும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

136/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) தற்போது இலங்கை கல்வி நிருவாக சேவையில் ஈடுபட்டுள்ள மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிப் பெயர்கள், சேவை புரியும் இடங்கள் ஆகியன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) தற்போது இலங்கை கல்வி நிருவாகச் சேவையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்கள் நிலவும் சேவை நிலையங்கள் யாவையென்பதையும்;

(iv) அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு போட்டிப் பரீட்சைகளை நடத்தியுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(vi) இவர்களுக்கு நியமனம் வழங்க எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

194/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை சனாதிபதியவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் மேற்படி விஜயங்களின் நோக்கங்கள்;

(ii) ஒவ்வொரு விஜயத்திற்காகவும் பங்கேற்ற ஆட்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பதவிகள்;

(iii) மேற்படி ஒவ்வொரு விஜயத்திற்காகவும் செலவிட்ட பணத்தொகை;

ஒவ்வோர் ஆண்டுவாரியாகவும் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

242/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக பெருந்தொகையானவர்களின் வீடுகளுக்கு சேதமேற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அவ்வாறு வீடுகள் சேதமடைந்த குழுவைச் சேர்ந்தவர்களில் 220 பேருக்கு தமது வீடுகளை கைவிட்டுச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு வீடுகளை கைவிட்டுச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ள வீட்டுச் உரிமையாளர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை;

(ii) வீடுகளை கைவிட்டுச் செல்ல முன்னர் அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இற்றைவரை ஈடேறவில்லை என்பதை அறிவாரா;

(iii) பாதிக்கப்பட்ட ஏறக்குறைய 220 வீட்டுச் உரிமையாளர்களின் சிக்கலைத் தீர்க்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

261/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

336/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இப்பலோகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட "அக்கர 500" எனும் கிராமம் தொடக்கம் கலாவெவ, குசலானகம வரையிலான சுமார் 3 கிலோ மீற்றர் நீளமான வீதி பெரிதும் பழுதடைந்து காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதனைத் துரிதமாக நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

373/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான றஹதங்கொட தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர் களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

437/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.06.30 ஆம் திகதியில் குத்தகை அடிப்படையில் வெளியாட்களுக்கு வழங்கப்பட்டுள்ள, மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான காணிகளின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) அவை வழங்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களது பெயர், முகவரி, வழங்கப்பட்டுள்ள குத்தகைக் காலம், குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு மற்றும் குத்தகைப் பணத்தொகை ஆகியவை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இக்காணிகளை குத்தகைக்கு வழங்குகையில், பகிரங்க சந்தை விலைகளுக்கு ஏற்ப சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, இதற்கேற்ப குத்தகைப் பணம் அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) காணியை குத்தகைக்குப் பெற்ற நபர்கள், அவற்றை துணை குத்தகைக்கு வழங்கியிருப்பார்களேயாயின், அக்காணிகள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறு துணை குத்தகைக்கு வழங்கியவர்களின் பெயர், முகவரி, குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காலம், காணியின் அளவு மற்றும் குத்தகைப் பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குத்தகை அறவீடானது இற்றைப்படுத்தப்படாமையாலும் சட்டவிரோத துணை குத்தகைக்கு வழங்கல் காரணமாகவும் கடந்த மூன்று வருட காலப்பகுதியில் சபை இழந்துள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

(iv) குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் துணை குத்தகைக்கு வழங்கலுக்கு எதிராக எடுக்கக்கூடிய நடவடிக்கைகைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

449/ '19

கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமத்திற்கு விளையாட்டைக் கொண்டு செல்லும் நோக்கத்துடன் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதியத்தினால் ரூபா மில்லியன் 350 ஐ செலவிட்டு நாவலப்பிட்டி, ஜயதிலக்க விளையாட்டு மைதானம், நீச்சல் தடாகம், உள்ளக விளையாட்டு அரங்கு, பார்வையாளர் கூடம், உள்ளக குத்துச்சண்டை விளையாட்டு அரங்கு என்பவற்றை உள்ளடக்கியதாக பூரணமான விளையாட்டு மைதானமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டின் இறுதிவரை இந்த விளையாட்டு மைதானம் விளையாட்டு அமைச்சின் கண்காணிப்பின் கீழ் நாவலப்பிட்டி நகர சபையினால் நல்லமுறையில் பராமரிப்புச் செய்யப்பட்டு வந்தது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iii) கடந்த மூன்று வருட காலப்பகுதிக்குள் இந்த விளையாட்டு மைதானத்தில் பராமரிப்போ, புதுப்பித்தலோ முறையான முகாமைத்துவமோ காணப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) இவ்வாறான ஏனைய விளையாட்டு மைதானங்கள் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு பொறுப்பேற்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றதைப் போன்று இந்த விளையாட்டு மைதானத்தையும் பொறுப்பேற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

505/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாண வைத்தியசாலைகளில் சிகிச்சைசார் கழிவுப் பொருட்கள் முல்லேரியா, சிசிலி ஹனாரோ நிறுவனத்தில் 24 மணி நேரமும் எரிக்கப்படுவதனால் வெளியாகும் புகை காரணமாக அதனைச் சூழ வசிக்கின்ற மக்கள் 2004 ஆம் ஆண்டு முதல் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தை தாபிக்கும் போது உலக சுகாதார தாபனத்தின் தகவுதிறன்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பதையும்;

(iii) மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உரிமப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் போது பிரதேச சுகாதார மருத்துவ அலுவலரின் சிபாரிசு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதையும்;

(iv) கடுமையாக உரிமப்பத்திர நிபந்தனைகள் மீறப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பிரதேச மக்களுக்கு சுகாதார தொல்லைகளை ஏற்படுத்துகின்ற சூழல் மாசடைவு இதன் மூலம் இடம்பெறுகின்றது என்பதை விஞ்ஞான ரீதியாக பரிசோதனை செய்து அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) மக்களுக்கு இடம்பெறுகின்ற அசௌகரியங்களைக் குறைப்பதற்காக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இன்றேல், இந்த தொல்லைகளை தடுப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய குறுங்கால மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) உலக சுகாதார தாபனத்தின் தகவுதிறன்களுக்கு இசைவாக இலங்கையினுள் சிகிச்சைசார் கழிவுகளை எரிப்பதற்கான நிலையமொன்றை உருவாக்க முடியுமா என்பதையும்;

(v) அதற்கு அரசாங்கம் ஏற்கெனவே திட்டங்களை வகுத்துள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அது அமுல்படுத்தப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

566/ ' 19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவினால் பண்டாரகம நகரத்தில் ஆயுர்வேத மருத்துவ நிலையமொன்று நடாத்தி வந்த இடத்தில் குத்தகைக்கு விடுவதற்கு கடை அறைகள் அமைக்கப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அமைக்கப்பட்ட கடை அறைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும் நிதி வழங்கியவர்கள் யாரென்பதையும்;

(iv) மேற்படி கடை அறைகள் குத்தகைக்கு விடுவதற்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஒவ்வொரு கடை அறைக்காகவும் கேள்விப்பத்திரம் முன்வைத்தவர்களின் பெயர், முகவரி கடை அறையின் இலக்கம் மற்றும் முன்வைக்கப்பட்ட விலை ஆகியவற்றை வெவ்வேறாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கேள்விப் பத்திரம் கோரல் பற்றி மக்களை அறிவூட்ட,

(i) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்;

(ii) அறிவித்தல் வெளியிடப்பட்ட ஒவ்வொரு பத்திரிகை, அறிவித்தல் இடப்பட்ட திகதி, மற்றும் அறிவித்தல்களின் எண்ணிக்கை;

(iii) விளம்பரப் பதாதை, அல்லது அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தப் பட்டிருப்பின், அவ்விடங்கள் யாவையென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி விளம்பரங்களின் பிரதிகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி கேள்விப்பத்திரக் கோரலுக்கு போதுமான அளவு கேள்விப்பத்திர தாரர்கள் இருக்கவில்லையென ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இச் சிக்கலை தீர்த்துக்கொள்ள மேற்படி கடை அறைகளுக்காக மீண்டும் கேள்விப்பத்திரம் கோருவதற்கு சிபாரிசு செய்வாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

760/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சனாதிபதி பதவியணியின் முன்னாள் தலைமை அதிகாரி கலாநிதி ஐ.எச்.கே. மஹானாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பீ. திசாநாயக்க ஆகியோர் அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களில் சேவையாற்றத் தொடங்கியது முதல் இன்று வரை,

(i) வகித்துள்ள பதவிகளையும்;

(ii) அப்பதவிகளை வகித்துள்ள காலப்பகுதிகளையும்;

(iii) குறித்த பதவிகளில் பணியாற்றியுள்ள நிறுவனங்களையும்; மற்றும்

(iv) மேற்படி சேவைக்காலத்தில் இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று அல்லது வேறு ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருப்பின், அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவற்றுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) திரு. (கலாநிதி) ஐ.எச்.கே. மஹானாம சனாதிபதி பதவியணி தலைமை அதிகாரி பதவியிலும், திரு. பீ. திசாநாயக்க அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியிலும் நியமிக்கப்படுவதற்கு யாரால் விதப்புரை வழங்கப்பட்டிருந்தது என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

840/ '19

கௌரவ கனக ஹேரத்.— கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சீதாவக்கை ஆற்றை இடைமறித்து, தெரணியகெல பிரதேசத்தில் நீர்த்தேக்கமொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்தின் நோக்கம் யாது என்பதையும்;

(iii) இதன் மூலம் இப்பிரதேசத்திலான மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கெடுப்பை எவ்வாறு தடுக்க முடியும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தை முன்னெடுக்கையில், தெரணியகெல நகரம், புராதன இடங்கள், கலாச்சார பெறுமதிவாய்ந்த இடங்கள், கமத்தொழில் மற்றும் ஏற்றுமதி பயிர்கள் அழிவடைவதானது மரபார்ந்த மக்கள் வாழ்க்கைமுறைக்கு தடங்கலாக அமையாதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தினால் பாதிக்கப்படும் மக்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

863/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) திரு. ஜீ. எம். டப்ளியு. எம். பிரேமதிலகவும் அவரின் பரம்பரையும் நில்தண்டாஹின்ன, உடமாதுர, தலாவ எனப்படும் காணியில் 100 வருடங்களுக்கும் மேலாக வசித்து வருகின்றனர் என்பதையும்;

(ii) 1986 ஆம் ஆண்டு இவர்கள் இக்காணியின் ஒரு எல்லையில் சுமார் 13 டர்பன்ரயின் மரங்களை நட்டுள்ளனர் என்பதையும்;

(iii) இவர்களின் தினசரி விறகு தேவையின் போது பயன்படுத்த அக்காலப் பகுதியில் புகையிலைக் கம்பனிகளால் இந்த மரங்கள் வழங்கப்பட்டிருந்தன என்பதையும்;

(iv) இவர்கள் வசிக்கும் பழைய வீட்டின் கூரை உடைந்து விழும் தறுவாயின் உள்ளதால் அதனை செப்பனிட்டுக்கொள்வதற்கு வளர்ந்துள்ள டர்பன்ரயின் மரங்கள் சிலவற்றை வெட்டுவதற்கு பிரதேசத்தின் வன உத்தியோகத்தர்களிடமும் பிரதேச செயலாளரிடமும் அனுமதி கோரி பல கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள போதும், இதுவரை அந்த மரங்களை வெட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட வில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து பிரேமதிலகவுக்கு வீட்டை அமைத்துக் கொள்வதற்காக இவர்களால் நடப்பட்ட 13 டர்பன்ரயின் மரங்களை வெட்டுவதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2019 யூன் 07, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

24/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் பயன்படுத்தப்படும் தொலைபேசி வலையமைப்புக்கள் ஊடாக இடம்பெறும் உரையாடல்களை செவிமடுப்பதற்கான அல்லது ஒலிப்பதிவு செய்வதற்கான உபகரணத் தொகுதியொன்றை வெவ்வேறாக அரசாங்கத்தினால் அல்லது ஏதேனுமொரு நிறுவனமொன்றினால் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டோ பொருத்தப்பட்டோ உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி தொகுதியின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொகுதி ஊடாக கண்காணிக்கப்படவுள்ள தொலைபேசிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இவ்வாறான தொகுதியொன்றை இறக்குமதி செய்வதன் நோக்கம் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

79/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்நாட்டின் மாதாந்த நுகர்வுக்கு அவசியமான கோழி இறைச்சியின் அளவு யாது;

(ii) இந் நாட்டின் மாதாந்த கோழி இறைச்சி உற்பத்தி எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு கோழி இறைச்சி எந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது;

(ii) மாதாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்ற கோழி இறைச்சியின் அளவு யாது;

(iii) இலங்கையிலிருந்து கோழி இறைச்சி ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள் யாவை;

(iv) மாதாந்தம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற கோழி இறைச்சியின் அளவு யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இறைச்சி உற்பத்தி செய்கின்ற கோழிப் பண்ணைகள் அதிகமாக வியாபித்துள்ள பிரதேசங்கள் யாவை;

(ii) ஒரு கிலோ கோழி இறைச்சியின் உற்பத்திக் கிரயம் எவ்வளவு;

(iii) தற்போது சந்தையில் ஒரு கிலோ கோழி இறைச்சிக்கான மொத்த விலை எவ்வளவு;

(iv) கோழி இறைச்சி உற்பத்தி மற்றும் விற்பனைக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

143/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் குப்பை கூளங்கள் சம்பந்தமாக பணியாற்றுகின்ற நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை குறிப்பிட்ட நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் குப்பை கூளங்களின் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், அவற்றில் பங்கேற்றுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிகள், செயலமர்வுகள் நடத்தப்பட்ட நகரங்கள் மற்றும் செலவிடப்பட்ட பணத் தொகை தனித்தனியாக யாவையென்பதையும்;

(v) இவ்வாறு வெளிநாட்டுப் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் அனுபவத்தை பயன்படுத்தி குப்பை கூளங்களின் முகாமைத்துவத்துக்காக அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

220/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எஸ்பெஸ்ரோஸ் பாவனையை தடைசெய்ய அரசாங்கம் முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(ii) அதில் தாக்கம் செலுத்திய விடயங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தடைக்கென அரசாங்கம் அடிப்படையாகக்கொண்ட நிபுணர் குழு அல்லது நிபுணத்துவ அறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அரசாங்கம் மேற்படி தடையை நீக்க முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(v) அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(vi) எஸ்பெஸ்ரோஸ் பாவனைக்கு உகந்ததென மீண்டும் சிபாரிசு செய்த வல்லுநர்கள் அல்லது நிபுணர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

243/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உக்குவெல பிரதேசசபை ஆளுகைப் பிரதேசத்திற்குச் சொந்தமான அல்கடுவ எனும் நகரம் உள்ளதென்பதையும்;

(ii) அந்த நகரத்தில் பொது மலசலகூடங்களும் நீர்க் குழாய்வழி முறைமையொன்றும் கிடையாதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில் உக்குவெல நகரத்தை விருத்திசெய்வதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

251/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கண்டி மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

342/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இப்பலோகம பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிறிமாகம எனும் கிராமத்தையும் கலா வாவியையும் இணைப்பதற்கு பாலமொன்றை நிருமாணிக்க திட்டமிடப்பட்டு அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணியை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் தேதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

427/ '19

கௌரவ கனக ஹேரத்,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மிளகு பயிரிடப்பட்டுள்ள நிலத்தின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை நாட்டின் மிளகு விளைச்சல் ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி செய்துள்ள மிளகின் அளவு ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) இந்த நாட்டில் உற்பத்தி செய்துள்ள மிளகின் அளவிற்கும் அதிகமான அளவு மேற்படி ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், இலங்கை மிளகு இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பதையும்;

(vi) இலங்கை மிளகு இறக்குமதி செய்கின்ற நாடுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு மிளகு இறக்குமதி செய்வதால் இந்நாட்டு மிளகு செய்கை அழிவடைவதோடு அப்பாவி மிளகு செய்கையாளர்களுக்கு அநீதி ஏற்படுத்தி உயர் மட்ட வர்த்தகர்கள் சிலருக்கு மாத்திரம் நன்மை ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) மிளகு கைத்தொழிலை மீண்டும் மேம்படுத்த ஏதேனும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது யாதென்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

435/ '19

கௌரவ பிமல் ரத்னாயக்க,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.07.31 ஆம் திகதி நெலும் பொக்குன அரங்கில் நடைபெற்ற சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சருக்கு 'சுவபதி கிருள' கௌரவிப்பு விழாவை ஏற்பாடு செய்த நிறுவனம் யாதென்பதையும்;

(ii) இவ்விழாவிற்கு செலவாகிய மொத்த தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இச்செலவை ஏற்ற நிறுவனம் யாதென்பதையும்;

(iv) குறித்த செலவினை பல நிறுவனங்களால் ஏற்கப்பட்டதெனின், அந்த ஒவ்வொரு நிறுவனமும் ஆற்றிய பணி மற்றும் செலவிட்ட தொகை தனித்தனியே யாதென்பதையும்;

(v) இவ்வாறான விழாவொன்றினை ஏற்பாடு செய்தமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

438/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் ஊழியர்களுக்காக செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி உள்ளிட்ட சட்ட ரீதியான கொடுப்பனவுகள் பற்றிய விபரத்தை தனித்தனியே வருடாந்த அடிப்படையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) இற்றைவரையில் செலுத்தப்படாத கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை தனித்தனியே வருடாந்த அடிப்படையில் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிதியத்துக்கு பணம் செலுத்தப்படாமை பற்றி தொழில் ஆணையாளர் அலுவலகத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

444/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டச் செயலகக் கட்டடத்தில் தற்போது அமைந்துள்ள பிரதி காணி ஆணையாளர் அலுவலகத்தை வேறு ஓர் இடத்திற்குக் கொண்டு செல்வதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலகத்திலுள்ள சகல அலுவலர்களினதும் பெயர்கள், பதவிகள் மற்றும் இனம் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை, காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் இவர்களின் இன ரீதியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

450/ '19

கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நாவலப்பிட்டிய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாவலப்பிட்டி நகரத்தில் பொதுச் சந்தையொன்று நிர்மாணிக்கப் பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) பொதுச் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிக்கு மற்றும் நிர்மாண நடவடிக்கைகளுக்கு நிதி செலவுகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) நாவலப்பிட்டி நகர சபையினால் இந்தப் பொதுச் சந்தைக்கு ஆரம்ப ஆண்டில் கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைத் தொகை யாது என்பதையும்;

(iv) தற்போதைய நகர சபையினால் வருடாந்த குத்தகைத் தொகை 1500%இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(v) ஒரே தடவையில் குத்தகைத் தொகை 1500% இனால் அதிகரிக்கப் பட்டுள்ளதனால் வியாபாரிகள் மேற்படி குத்தகைத் தொகையை செலுத்த முடியாதுள்ளனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(vi) இந்த நிலைமை பற்றி மீளாய்வு செய்து மீண்டும் நியாயமான குத்தகைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நாவலப்பிட்டி நகர சபைக்கு அறிவுரை வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

466/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 3-4 மாத காலமாக புத்தளம் மாவட்டம் கடும் வறட்சியை எதிர்நோக்கியதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வறட்சியின் காரணமாக புத்தளம் மாவட்ட தென்னைச் செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iii) வறட்சியினால் பாதிக்கப்பட்ட புத்தளம் மாவட்ட தெங்குச் செய்கையாளர் களுக்கு ஏதேனும் நிவாரணம் அல்லது உதவிகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

468/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது இலங்கையில் காணப்படுகின்ற,

(i) உள்நாட்டு விமான நிலையங்களின் எண்ணிக்கை;

(ii) உள்நாட்டு விமான நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள்;

(iii) உள்நாட்டு விமானப் பயணங்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற விமானங்களின் எண்ணிக்கை;

தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த திகதி முதல் இதுவரை உள்நாட்டு விமானப் பயண வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சுற்றுலாத்துறை மீதான ஈர்ப்பை மேம்படுத்துவதற்கு மற்றும் அவ்வாறான ஈர்ப்பைக் கொண்ட இடங்களுக்கு இலகுவாக பிரவேசிப்பதற்கு கேபல் கார்களை பயன்டுத்துவதை வெளிநாடுகளில் அவதானிக்கக்கூடியதாக உள்ளதனால் இலங்கையிலும் அவ்வாறான,

(i) கேபல்கார் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான ஆற்றல் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறான கார்களை பயன்படுத்தக்கூடிய இடங்கள் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி இடங்கள் யாவை என்பதையும்;

(iv) இந்த கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

506/ '19

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனர் திரு. அஜித் நிவாட் கப்ராலின் தங்கையான திருமதி சிரோமணி விக்கிரமசிங்ஹ, லங்காபுத்ர வங்கியில் பிரதம நிறைவேற்று அலுவலராக பணியாற்றிய காலத்தில் ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக ப்ரயிஸ் வோட்டர்ஹஷஸ் கூப்பர்ஸ் கணக்காய்வு நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) 2006 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை வங்கிச் சட்டத்தை மீறி அரசியல் ஆதரவாளர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மீளச் செலுத்துவதற்கான ஆற்றலைக் கவனத்திற்கொள்ளாது அரசக் காணிகள், விகாரைகளுக்குரிய காணிகள். தரிசுக் காணிகள் மற்றும் மாணிக்கக் கற்களாக காண்பிக்கப்பட்ட படிகக் கற்கள் ஆகியவற்றை உத்தரவாதமாகப் பெற்று கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு கடன் பெற்றுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான ஒவ்வொரு நபரும் நிறுவனமும் பெற்றுள்ள கடன் தொகை யாது என்பதையும்;

(iii) இன்றளவில் மேற்படி கடன் தொகையில் மீளச் செலுத்தப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(iv) இவ்வாறு கடன் வழங்க அனுமதியளித்த அப்போதைய பிரதான நிறைவேற்றுனர் உட்பட பணிப்பாளர் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அதன் முன்னேற்றம் யாது என்பதையும்;

(vi) இன்றேல், அது தொடர்பில் முறையான சட்ட நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.11/' 18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— ஹஜ் யாத்திரைச் சட்டமொன்றை அறிமுகப்படுத்தல்,— வருடாந்தம் ஹஜ் யாத்திரையில் ஈடுபடுகின்ற இலங்கை பக்தர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும், அது தொடர்பான நிருவாக அமைப்பொன்றை தாபித்து சட்ட முறையான ஏற்பாடுகளை வகுக்கவும், அரசாங்கத்தால் "ஹஜ் யாத்திரைச் சட்டமொன்று" அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் பெருவாரியாகப் பரவும் நோய்களைத் தடுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்குக்குப் பின்னர் அனர்த்தத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் நீர் வடிந்தோடியதன் பின்னர் எலிக்காய்ச்சல், வயிற்றோட்டம் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக குறிப்பிட்ட பிரதேசங்களில் பொது சுகாதார பரிசோதகர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதனால், அத்தகைய பெருவாரியாகப் பரவும் நோய் நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தல்,— மக்களின் போஷாக்குத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான புரதச் சத்தை பெற்றுக் கொடுக்கவும், வருடாந்தம் ரின் மீன் இறக்குமதிக்காக வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், மேலும் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்கத் தேவையான அனைத்து வளங்களும் புத்தளம் மாவட்டத்தில் இருப்பதாலும், அம்மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கோழிப் பண்ணை உரிமையாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற 'பற்றரி கேஜ்' முறைமையை நிறுத்துதல்,— இலங்கை பண்டைய காலந்தொட்டு உயிரினங்கள் மீது அன்பு செலுத்துகின்ற பௌத்த நாடாக விளங்கிய போதிலும், இன்றளவில் சில கோழிப் பண்ணையாளர்கள் பயன்படுத்துகின்ற பற்றரி கேஜ் முறைமை காரணமாக விலங்குகள் பெரும் சித்திரவதைக்குள்ளாவதனாலும், அதிக முட்டை உற்பத்தியின் மூலம் சிறிய அளவிலான கோழிப் பண்ணையாளர்களின் தொழில்கள் ஆபத்தான நிலைக்கு உள்ளாகியுள்ளதன் காரணத்தினாலும், மேற்படி மனிதாபிமானமற்ற முறைமையை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/ '19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— இணையத் தளங்களில் ஆபாச காணொளிகள் உலாவுவதை தடுக்கும் பொருட்டு சிறப்பு அலகொன்றைத் தாபித்தல்,— தற்போது அதிகளவில் இணையத் தளங்கள் ஊடாக பல்வேறு ஆபாச காணொளிக் காட்சிகள் உலாவுவதன் மூலம் ஆட்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பேற்படுவதோடு குறிப்பாக பெண்கள் அதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதால், இவ்வாறான காணொளிக் காட்சிகளை தன் வசம் வைத்துள்ள, விநியோகிக்கின்ற மற்றும் உருவாக்குகின்ற ஆட்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு பயன்மிக்க சிறப்பு பிரிவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினுள் கீழ் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல்,— 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூலம் மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பீடமொன்றை நிர்மாணிக்க முன்மொழியப்பட்டுள்ளதோடு மேற்படி முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் 9 ஆம் தரம் வரை அவர்களது சமயங்களின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் தாபித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்தல்,— கண்டி மாவட்டத்தை புவியியல் ரீதியில் நோக்குகையில் கடல் பிரதேசத்திலிருந்து தூரமாக அமைந்திருப்பதனால் இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் புரதத் தேவையை நிறைவு செய்வதற்காக கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்து குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்பைக் குறைத்தல்,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பு காரணமாக சூழலுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளமையால் இந்த சூழல் பாதிப்பை குறைப்பதற்கான துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகளை அகற்றுதல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் கண்டி வைத்தியசாலையை இரண்டாவது தேசிய வைத்தியசாலையாக முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்படி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகள் அனைத்தையும் அகற்றத் துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து உச்ச பயன் பெறுதல்,— ஒரு விவசாய நாடான எமது நாட்டின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து விவசாய கைத்தொழிலுக்கு பாரிய சேவையாற்றப்படுகின்ற போதிலும், இந்த ஆற்று நீர் பாரியளவு பயன்படுத்தப்படாது கடலுடன் கலப்பதாக அறிவியல்சார் ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால், மகா பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்தைப் போன்று இந்த நீர் வளத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு உச்ச பயன் பெறக்கூடியவாறு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்தல்,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டுக்கு திறமையைக் கொண்டுள்ள பெரும் எண்ணிக்கையானோர் இருப்பதனால் மேற்படி ஆட்களை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டுசெல்லக் கூடியவகையில் கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 20/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்துக்குரித்தாக இருந்த கரப்பந்தாட்ட விளையாட்டின் பெருமையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இற்றைக்கு ஏறத்தாழ ஒரு தசாப்தத்துக்கு முன்னர் புத்தளம் மாவட்டத்தின் பாடசாலைகளிலிருந்து உருவாகிய திறமைவாய்ந்த கரப்பந்தாட்ட விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெளிப்படுத்திய திறைமைகளின் காரணமாக புத்தளம் மாவட்டத்துக்கு கரப்பந்தாட்ட விளையாட்டு மூலம் பெருமையானதோர் இடம் கிடைத்திருந்த போதிலும், இன்றளவில் அந்த நிலைமையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதனால், மீண்டும் அந்தப் பெருமையை புத்தளம் மாவட்டத்துக்கு கொண்டு வருவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை சிலாபம் வரை நீடித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மிக முக்கியமானவையாக உள்ளதாலும், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டம் மிக துரிதமாக அபிவிருத்தியடைந்து வருவதாலும், அந்த அபிவிருத்தி வேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தற்போது கொழும்பிலிருந்து கட்டுநாயக்க வரையுள்ள அதிவேக நெடுஞ்சாலை சிலாபம் வரை நீடிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வடமேல் மாகாணத்தில் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக மருத மர நடுகைக் கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— மண்ணில் உள்ள நீரைப் பாதுகாக்கும் ஆற்றலைப்போன்றே மண்ணரிப்பினை குறைக்கும் பண்புடைய நீண்ட ஆயுட்காலத்தைக்கொண்ட மருத மரத்தை வடமேல் மாகாணத்தின் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக நடுகைசெய்யும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— பத்தலங்குண்டு தீவுவாசிகளான மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டிக் குடாநாட்டுக்கு அருகில் உள்ள பிரதான தீவுகளிலொன்றான பத்தலங்குண்டு தீவைச்சேர்ந்த மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகள் இற்றைவரை முறையான கவனத்திற்கு இலக்காகவில்லை என்பதால், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் அம்மக்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— தற்பொழுது உலகில் நீர்வாழ் தாவரங்களுக்கு பெருங் கேள்வி நிலவுவதோடு, அதன் மூலம் எமது நாட்டுக்கு பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய பரந்துபட்ட வாய்ப்பு உருவாகியுள்ளதோடு, அண்மையில் ஜப்பான் நாட்டு நிபுணர்களால் தமது ஆராய்ச்சி அறிக்கையொன்றில் நீர்வாழ் தாவர வளர்ப்புக்கு புத்தளம் மாவட்டத்தின் கரையோரம் சார்ந்த பிரதேசம் மிகவும் உகந்ததெனச் சுட்டிகாட்டியுள்ள பின்னணியில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றைப் புத்தளம் மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை நிறுவுதல்,— வடமேல் மாகாணத்தில் தற்போது புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளமையினால் அந்த நோயாளிகளுக்காக வடமேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலையொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 27/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலை ஒன்றைத் தாபித்தல்,— இலங்கையின் பிரதான சிறுவர் வைத்தியசாலையாகிய றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் காணப்படுகின்ற பாரிய இட நெருக்கடியைக் குறைப்பதற்காகவும் வட மேல், வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பயன்தரும் வகையிலும் வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலையொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 28/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலை ஒன்றைத் தாபித்தல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தினை ஒரு சுற்றுலா வலயமாக முன்னேற்றுவதற்கு எதிர்பார்ப்பதால் இக்கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு தேவையான மனித வளத்தை பயிற்றுவிப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலையொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 29/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்பிட்டி சார்ந்த பிரதேசங்களில் பனைக் கைத்தொழிலை ஊக்குவித்தல்,— வட மேல் மாகாணத்தின் கல்பிட்டி பிரதேசத்தில் பனை சார்ந்த கைத்தொழில் கடந்த சில வருடங்களாக பெரும் சரிவை சந்தித்துள்ளதால், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம், எதிர்காலத்தில் கல்பிட்டி பிரதேசத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்திற்கு நேர் ஒத்ததாக அப்பிரதேசத்தில் பனைக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுப் பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வருடாந்தம் பால் மா இறக்குமதிக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுவதுடன், இப்பணத்தை எமது நாட்டிற்குள்ளேயே சேமித்துக்கொள்ள முடியுமெனில் அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் உந்துசக்தியாக அமையுமென்பதால் பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரிதமான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வடமேல் மாகாணத்திலுள்ள குருநாகல் மாவட்டம் மிகவும் பெருமைவாய்ந்த வரலாற்றிக்கு உரிமை கோரும் தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த பல இடங்களைக் கொண்டதொரு மாவட்டமாக இருப்பதுடன், பண்டைய காலத்தில் குருநாகல், தம்பதெனிய மற்றும் யாப்பகுவ போன்ற இராச்சியங்களும் இம்மாவட்டத்திலேயே அமைந்திருந்ததெனினும் தற்போது இந்த புராதன இடங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளதால் மேற்படி தொல்பொருளியல் இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.33/ ’19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்றை நடைமுறைப்படுத்தல்,— எந்தவொரு நாட்டிலும் வெற்றிகரமான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று காணப்படுவது அந்த நாட்டில் வாழும் பிரசைகளுக்கு முக்கியமாகும் என்பதுடன், இலங்கையில் அரசதுறை மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்காக ஓய்வூதிய முறையொன்று அல்லது ஊழியர் சேமலாப நிதிய முறையொன்று நடைமுறையில் இருந்த போதிலும், நாட்டில் முறைசாரா துறையிலுள்ள ஊழியர்களுக்காக அத்தகைய சமூக பாதுகாப்பு முறையொன்று நடைமுறையில் இல்லாமையால், அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/ ’19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் சிறுநீரக நோயாளிகளுக்காக வைத்தியசாலையொன்றை நிர்மாணித்தல்,— வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுநீரக நோய் பாரியளவில் அதிகரித்துள்ளமையால், சிறுநீரக நோயாளர்களுக்காக வடமேல் மாகாணத்தில் வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/ ’19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் தலசீமியா நோயாளர்களுக்கென வைத்தியசாலையொன்றைத் தாபித்தல்,— அண்மைக் காலத்தில் இலங்கையில் அதிக எண்ணிக்கையான தலசீமியா நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டிருப்பது குருநாகல் மாவட்டத்திலாகும் என்பதுடன் இதுவரை மேற்படி நோயாளிகளுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான தனியான வைத்தியசாலையொன்றை தாபிக்கப்படாமையினால் மேற்படி நோயாளிகளுக்கு தனியான வைத்தியசாலையொன்றை குருநாகல் மாவட்டத்தில் தாபிக்க வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/ ’19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான விகாரைகள் காணப்படுவதும், அதிகப்படியான பிக்குமார் வசிப்பதும், கூடுதலான பௌத்தர்கள் வாழ்வதும் மற்றும் அதிகளவான சாசன பாதுகாப்பு அதிகார மன்றங்கள் நடைமுறையில் உள்ளதுமான வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

பா. 37/ ’19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்தின் விளைவாக பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தில் வீடுகள், காணிகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக நிலக்கீழ் சுரங்கங்கள் அகழப்படுவதால் பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்திலுள்ள மக்கள் தங்களது வீடுகளையும் காணிகளையும் இழந்து தற்போது மூன்று வருட காலம் கடந்துள்ள நிலையில், இடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கு இற்றைவரை எவ்வித இழப்பீட்டுத் தொகையோ அல்லது வேறு நிவாரணமோ கிடைக்கவில்லை என்பதால் இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 38/ ’19

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பித்தல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ள சந்தைகளுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக தற்போது ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 8,394 குடும்பங்கள் பாரிய நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதனால் அந்த மக்களுக்கான நீர் வசதியை வழங்குவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை நடமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/ '19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற உளநல ஆலோகர்களை அல்லது போசகர்களை நியமித்தல்,— தற்போது பரவலாக காணக்கூடியதாக உள்ள இளைஞர் யுவதிகள், மாணவ மாணவியர்கள் தற்கொலை செய்து கொள்ளும் போக்கினை தடுப்பதற்கு அனைத்து அரச கல்வி நிறுவனங்களுக்கும் பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர்கள், போசகர்கள் நியமிப்பட வேண்டுமென அல்லது மேற்படி கல்வி நிறுவனங்களில் தற்போது பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு உளநல ஆலோசனை தொடர்பான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 47/ '19

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— கொலொன்னாவ மாநகரசபையை நிறுவுதல்,— கொழும்பு நகரத்தையும் அண்டிய நகரங்களையும் நிர்வகிப்பதற்காக கொழும்பு, கடுவெல மற்றும் கோட்டே எனும் மூன்று மாநகரசபைகள் நிலவியபோதிலும், இந்த மூன்று மாநகரசபை ஆளுகைப் பிரதேசங்களினதும் எல்லையில் அமைந்துள்ள கொலொன்னாவ தேர்தல் தொகுதி இரண்டு நிர்வாக அலகுகளான கொலொன்னாவ நகரசபை மற்றும் கொட்டிகாவத்த – முல்லேரியாவ பிரதேச சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருவதால் ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வேறுபாடுகளைத் தோற்றுவிக்க இது காரணமாக அமைந்துள்ளதோடு சுற்றுப்புறத்தில் நிலவுகின்ற மாநகரசபைகள் நிர்வாகத்தின் வினைத்திறனின்பேரில் துரித அபிவிருத்தியை இன்றளவில் அடைந்துள்ளமையால், ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு கொலொன்னாவ நகரசபையையும் கொட்டிகாவத்த – முல்லேரியா பிரதேச சபையையும் ஒருங்கிணைத்து கொலொன்னாவ மாநகரசபை நிறுவப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 49/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வெற்றிலை செய்கையை மேம்படுத்தல்,— கம்பஹா மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்ற அனேகமானவர்களின் வாழ்வாதாரமாகிய வெற்றிலை செய்கையானது நாட்டுக்கு அந்நியசெலாவனியை ஈட்டித் தருகின்ற விவசாயப் பயிர் என்பதோடு, இலங்கையிலிருந்து வெற்றிலையை கொள்வனவு செய்கின்ற பிரதான நாடொன்றாகிய பாகிஸ்தான் அண்மையில் அந்நாட்டுக்கு இறக்குமதி செய்கின்ற வெற்றிலைக்கு விதித்துள்ள வரி காரணமாகவும், உள்நாட்டு பயிர்ச்செய்கைக்கு தாக்கம் ஏற்படுத்துகின்ற பல விடயங்கள் காரணமாகவும், உள்நாட்டில் வெற்றிலை விலை மிகவும் குறைந்துள்ள பின்னணியில் வெற்றிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிகளும் ஒழுங்கீனமாகியுள்ளதாலும் இத்தகைய நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ள வெற்றிலை செய்கையாளர்களை மேம்படுத்தவும், தேவையான இறக்குமதி திசைகளை கண்டறிவதற்கும் அவசியமாகின்ற அரசாங்கத்தின் தலையீட்டை வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்வதன் மூலமாக வெற்றிலை செய்கையை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 50/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்பட்ட பிணையாளிகளை அப்பட்டியலில் இருந்து விடுவித்தல்,— நாட்டில் இயங்கும் வர்த்தக வங்கிகளினால் நாட்டின் பிரசைகளுக்கு பல்வேறு தேவைகளுக்காக கடன் வழங்கும் போது ஆதனப் பிணைகளும் தனிநபர் பிணைகளும் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் இவ்விடயத்தில் பிணையாளி கடன்பெறுனருக்கு உதவியாக அதைச் செய்தாலும் ஏதேனும் காரணத்தால் அவ்வாறான கடனாளிகள் கடனை மீளச் செலுத்தத் தவறும் பட்சத்தில் கடனாளி உள்ளிட்ட பிணையாளிகளின் பெயர்களும் கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்படுவதால் பிணையாளிக்கு பாரிய அநீதி ஏற்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் சார்ந்த பிரச்சினை தீர்க்கப்படும் வரை பிணையாளிக்கு வங்கிக் கடனொன்றை பெற்றுக்கொள்ள இயலாத நிலையொன்று ஏற்படுவது மாத்திரமின்றி புதிய தொழில்முயற்சியாளர்கள் உருவாகுவதற்கும் மொத்த தேசிய உற்பத்திக்கும் பாதகமான முறையில் தாக்கம் ஏற்படுவதால் பிணையாளிகள் சார்பாக நெகிழ்ச்சிமிக்கதொரு கொள்கையினை பின்பற்றி கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்பட்டுள்ள பிணையாளிகளை அப்பட்டியலில் இருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தனியார் உயர்கல்வி நிறுவனங்களை உயர் தரத்துடன் பேணிச் செல்லும் நோக்கில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்தல்,— இலங்கையில் பல தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் தாபிக்கப்படும் போக்கு காணப்படுவதோடு முறையான கல்வியானது ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உதவியளிப்பதனால் தனியார் கல்வி நிறுவனங்களின் உருவாக்கமானது பல துறைகளில் நாட்டிற்கு சாதகமாக அமைகின்ற போதிலும் குறிப்பிட்ட நிறுவனங்களிலிருந்து பெற்றுத்தரப்படுகின்ற சேவைக்குரிய தரம் பேணப்படுகின்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்துடன்கூடியதாக பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுப்பது மிகவும் முக்கியம் என்பதனால் அனுபவம் வாய்ந்த புத்தி ஜீவிகளினதும் கல்வியியலாளர்களினதும் தலையீட்டின் கீழ் உரிய பாடநெறிகளுக்கான உள்ளடக்கத்தினை ஆராய்ந்து தனியார் உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து வழங்கப்படுகின்ற சேவையினை உயர் தரத்துடன் பேணிச்செல்வதற்காக தற்போது காணப்படுகின்ற சட்ட முறைமையானது பலம் பொருந்தியதாக அமையவில்லை என்பதால் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தினை துரிதமாகத் திருத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தனியார் நிதி நிறுவனங்களைப் பேணிச் செல்வதற்கு ஏற்புடைய சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக பண வைப்பாளர்களைப் பாதுகாத்தல்,— தனியார் நிதி நிறுவனங்களில் பணத்தை வைப்புச் செய்யும்போது பண வைப்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் தோன்றுவதாலும், பண வைப்பாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் நிதிக் கம்பனிகளில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய சட்ட ஏற்பாடுகள் இன்மையாலும், 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் திருத்தங்களையும், வலுவிழந்த சட்டத்தைப் பலப்படுத்தும் பணிகளையும் துரிதமாக மேற்கொண்டு, அதற்கு உதவியாக 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் மற்றும் 19 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) ஆகிய சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக நாட்டினுள் பலம் வாய்ந்த நிதிப் பிரிவொன்று கட்டியெழுப்பப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.53 / '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— உரிய தரத்தைக் கொண்ட சிறு ஏற்றுமதி பயிர்களை உற்பத்தி செய்தல்,— சிறு ஏற்றுமதி பயிர் உற்பத்தி உரிய தரமின்றி மேற்கொள்ளப்படுவதால் பயிர்செய்கையாளர்களுக்கும் நாட்டுக்கும் பாதகமான தாக்கம் ஏற்படுவதோடு, அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு ஏற்றுமதிகளை அதிகரிப்பது உந்துசக்தியாக உள்ள போதிலும் இலங்கையின் சிறு ஏற்றுமதி பயிர்களுக்கு சர்வதேசத்தில் காணப்பட்ட நற்பெயர், கொறக்கா புளிக்கு யூரியா கலத்தல் போன்ற மோசடியான செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதோடு எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற சிறு ஏற்றுமதி பயிர்களுக்கு நிலவிய சர்வதேச கேள்வி குறைந்துள்ளதால் உள்நாட்டு விலையும் குறைந்துள்ள பின்னணியில் இந் நிலைமையினை உடனடியாக மாற்றி உற்பத்தி செய்யப்படுகின்ற சிறு ஏற்றுமதி பயிர்களின் தரத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தொழில் முயற்சி வங்கி முறையை அறிமுகம் செய்தல் மற்றும் தாபித்தல்,— நாடு பூராகவும் அமைந்துள்ள வணிக வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களை உற்சாகப்படுத்துவதற்காக வழங்கப்படும் நிதி அனுசரணை போதியதாக அமையாமையால், உலகில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் புழக்கத்தில் உள்ள தொழில்முயற்சி வங்கி முறைமையை இலங்கையில் பிரபல்யப்படுத்துவதன் மூலம் புதிய தொழில்முயற்சியாளர்களின் உருவாக்கத்தில் அதிகரிப்பை ஏற்படுத்த முடியும் என்பதுடன், புதிய கருத்துக்களுடன் வங்கிக்கு வருகை தரும் இளைய தொழில்முயற்சியாளர்களது தேவைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு நிதி வசதியை மாத்திரமன்றி வர்த்தக அறிவையும் தொடர்ச்சியான பாதுகாப்பையும் வழங்குதல் இந்த வங்கி முறைமையிலுள்ள விசேட அம்சமாக காணப்படுவதனாலும், இதன் மூலம் உருவாக்கப்படும் தொழில்வாய்ப்புகளுடன் தேசிய உற்பத்தியும் அதிகரிப்பதனால் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவியாக அமைவதனாலும் தொழில்முயற்சி வங்கி முறையை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 55/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— ஆயுர்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களை கண்காணித்தல்,— நாட்டில் பல இடங்களில் ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் இடங்கள் அதிகளவில் திறக்கப்படும் போக்கு காணப்படுவதுடன் தொழில்முயற்சியாளர்கள் உருவாகுதல் நாட்டிற்கு நன்மைபயப்பதாக காணப்பட்ட போதிலும், இதனால் சமூகத்திற்கு நன்மை ஏற்பட வேண்டுமென்பதால், அநேகமான ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களில் இடம்பெறுகின்ற முறைகேடுகளைத் தடுப்பதற்கும் இதன் மூலம் சமூக ரீதியான நன்மைகளுடன் சிறந்த சூழலை உருவாக்குவதற்கும் அதிகாரமுள்ள நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களை தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/ '19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— "இந்திய தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட இனப் பிரிவினர் எதிர்கால சனத்தொகை மதிப்பீட்டின் போது "மலையக தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்.— இந்தியாவிலிருந்து இந்நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ள இந்தியர்கள் "இந்திய தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதுடன் இன்று இவர்கள் "மலையக தமிழ்" என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு இலங்கை பிரசாவுரிமையை பூரணமாக அனுபவித்து வருகின்ற போதிலும் "இந்திய தமிழ்" என்று அவர்களை அடையாளப்படுத்துவதன் மூலம் அவர்களின் இலங்கைப் பிரசாவுரிமை கேள்விக்கு இடமாகின்ற நிலை காணப்படுவதனால், சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சனத்தொகை மதிப்பீடுகளின் போது இந்த இனப் பிரிவினரை "மலையக தமிழ்" எனும் தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 57/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்றினைத் தாபித்தல்,— தேசிய நல்லிணக்கத்தையும் மற்றும் இனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் மேலும் பயனுறுதியான விதத்தில் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால இலக்குகளுக்கு அடியெடுத்து வைக்கும் நோக்கத்துடன், இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 58/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— இலங்கையில் தற்போது மிக வேகமாகப் பரவிவரும் ஆக்கிரமிப்பு தாவர வகைகளின் பரவுதலை இல்லாதொழிப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— இலங்கையில் தற்போது ஆக்கிரமிப்பு தாவர வகைகள் பல பரவி வருவதோடு ஒருசில அமைப்புக்கள் மற்றும் நபர்களால் நாட்டில் பாதைகளின் இருமருங்கிலும், மயான பூமிகளிலும் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஆகிய பொது இடங்களிலும் நாட்டப்பட்ட அக்கேஷியா போன்ற மரங்களினால் தேன் கூட்டங்களின் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென அந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் தாவர இனங்களைப் போன்றே உயிரினங்களினதும் வாழ்விற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள இவ்வாறான ஆக்கிரமிப்பு தாவர வகைகளினது பரவலை தடுத்து முழுமையாக ஒழிப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 59/ '19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை புதிய முறைமையொன்றின் மூலமாக நிர்வகிப்பதற்காக சிறுதோட்ட உரிமையாளர்களாக நியமித்து தொழிலாளர்களுக்கு தோட்டங்களின் உரிமையைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்,— இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் துறைக்கு நீண்டகால வரலாறு காணப்படுவதுடன், கடந்த 25 வருட காலப்பகுதியினுள் ஒயில் பாம் உட்பட புதிய பயிர்ச்செய்கைகள் பெருந்தோட்டத்துறையில் நுழைந்து இருப்பதுடன் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறையின் திறனற்ற முகாமைத்துவம் காரணமாக இத்துறையானது வீழ்ச்சிக்கு உள்ளாகி தொழிலாளர்களுக்கு கூட நம்பிக்கையுடன் தமது தொழில்களில் ஈடுபடுவதற்கான பொருளாதார சமூகச்சூழலொன்று அங்கு காணப்படாமையினால், எமது நாட்டிலே பிரதான ஏற்றுமதி வருமானத்துறையாகிய பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள தனியார் மயப்படுத்துகையில் இருந்து அகற்றி அரச தலையீட்டின் கீழ் புதிய முறைமையொன்றின் மூலமாக நிர்வகிப்பதற்காக சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றியமைத்து தொழிலாளர்களுக்கு சிறு தோட்டங்களைப் பகிர்ந்தளித்து அவற்றை நிலைபேறாக நடாத்திச் செல்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

---

# 2019 யூன் 18, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

26/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் இலங்கை பொலிஸாருக்கு கிடைத்துள்ள பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்திற்கு அமைவாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளில் தற்சமயம் விசாரணைகள் நிறைவு பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

81/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) பத்து இலட்சம் தொழில்வழங்கும் அரசாங்க வேலைத்திட்டத்தின் கீழ் இன்றளவில் உருவாக்கப்பட்டுள்ள தொழில்களின் எண்ணிக்கை யாது;

(ii) பட்டதாரிகளுக்காக அமுலாக்கப்பட்ட தொழில்வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை;

(iii) அதன் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது;

(iv) இதில் தனியார் துறைக்காக ஆற்றுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை எவ்வளவு;

(v) அரசாங்கத் தொழில்களுக்காக ஆற்றுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கத்தின் நிரந்தர சேவைக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அரசாங்கத்தின் அமய சேவைக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை எவ்வளவு;

(iii) அரசாங்கத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் படி எவ்வளவு;

(iv) அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றுக்கு இணைக்கப்பட்ட எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

144/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் சந்தைப்படுத்தல் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அரிசியாலை உரிமையாளர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி அரிசியாலை உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான என்றவகையில் வெவ்வேறாக யாவை;

(iii) தனியார் அரிசியாலை உரிமையாளர்களுக்கு நெல்லை சந்தைப்படுத்துகையில் அமைச்சு கடைப்பிடித்த முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

196/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.01.09 முதல் 2018.06.30 வரை பிரதமர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள்;

(ii) அவ்விஜயங்களின் நோக்கங்கள்;

(iii) மேற்படி ஒவ்வொரு விஜயத்திலும் கலந்து கொண்டவர்களின் எண்ணிகையும் அவர்களது பதவிகளும்;

(iv) மேற்படி ஒவ்வொரு விஜயத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம்;

தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

232/ '18

கௌரவ ரோஹினி குமாரி விஜேரத்ன,— நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிருவகிக்கப்படும் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்த பீடங்களின் எண்ணிக்கை தொடர்பான பட்டியலொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகங்களிலும் பீடங்களிலும் தற்போது கல்வி கற்று வரும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பல்கலைக்கழகங்களிலும் பீடங்களிலும் வெளிவாரிப் பட்டப்படிப்பு கற்கைநெறிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் பீடத்திலும் வெளிவாரிப் பட்டப் படிப்பிற்காக பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் பீடத்திலும் வெளிவாரிப் பட்டப் படிப்பிற்காக அறவிடப்படும் கட்டணங்கள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் பீடத்திலும் வெளிவாரிப் பட்டப் படிப்பிற்காக பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களினால் கற்கை நெறிக்காக செலுத்தப்படும் கட்டணங்கள் எந்தக் கணக்கில் வைப்பிலிடப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி பணம் வரவு வைக்கப்படும் கணக்குகளில் தற்போதுள்ள மீதிகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு கணக்கு வைக்கப்பட்டுள்ள பணம், நிதி அமைச்சு அல்லது உயர் கல்வி அமைச்சு அல்லது வேறு அரச நிறுவனமொன்றினால் கண்காணிக்கப்படுகிறதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

262/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் திருகோணமலை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக்கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக்கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

343/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெகிராவ நகரில் அமைந்துள்ள இந்து ஆலயம் மிகப் பழமையானதும் சேதமடைந்த நிலையிலும் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் மந்தகதியில் இடம்பெறும் மறுசீரமைப்பு பணிகளை துரிதமாக மேற்கொண்டு இந்த ஆலயத்தை வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு இந்து மத அடியார்களுக்கு வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

429/ '19

கௌரவ கனக ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கம் பெரலிய" எனும் பெயரில் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கிராமிய கருத்திட்டங்களின் இயல்பு யாதென்பதையும்;

(iii) இதற்கான அபிவிருத்தி முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளும் வழிமுறை மற்றும் அந்த முன்மொழிவுகள் பெற்றுக்கொள்வது எத்தகைய குழுவினுடாக என்பதையும்;

(iv) இதனூடாக ஒவ்வொரு தொகுதிக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி ஏற்பாடு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ் வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய கருத்திட்டங்களின் ஒப்பந்தப் பணிகள் மெற்கொள்ள எதிர்பார்க்கப்படும் வழிமுறை யாதென்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

439/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016.12.31 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் இன்றி அதிகாரசபைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஆலோசகர்கள் மற்றும் பொதுசன தொடர்பாடல் அலுலவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆட்களின் பெயர், முகவரி, செலுத்தப்படுகின்ற கொடுப்பனவு, இணைக்கப்பட்டுள்ள கருத்திட்டம், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள முறையியல், கல்வி மற்றும் வேறு தகைமைகள் மற்றும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள் ஆகியவை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) இதுவரை அவர்களில் எத்தனை பேர் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதையும்;

(iv) இது தொடர்பில் அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

446/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர், திரு. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான சதி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு நாலக சில்வா, எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர் ஒருவருடனும், புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுடனும், பாதாள உலகத்தின் பிரபலமான நபர் ஒருவருடனும் தொடர்புகளைப் பேணி வந்துள்ள ஒருவர் என்பதால் சனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அதிகரிக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) சனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் நாடளாவிய ரீதியில் மக்கள் சந்திப்புக்கள் உட்பட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதால், இவர்களின் போக்குவரத்திற்காக குண்டு துளைக்காத வண்டிகள் அல்லது அவ்வாறான வசதிகள் வழங்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) இவ்விடயம் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்திய நாமல் குமார என்பவர் கூறுவதுபோல், சம்பவத்துடன் தொடர்புடைய தொழில்நுட்பச் சான்றுகளை 05 நிமிட குறுகிய காலத்தினுள் அழித்துவிட முடியுமென்பதால், விசாரணைகள் நடைபெறுகின்ற நிலையிலும் சம்பந்தப்பட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரை சேவையில் வைத்திருப்பதற்கு பொலிஸ் மாஅதிபருக்கு இருக்கின்ற தேவை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

467/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) இந்த ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனத்தினாலும் நிர்வகிக்கப்படுகின்ற சிறுவர் பூங்காக்களின் எண்ணிக்கை யாது;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை;

(v) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இந்த ஒவ்வொரு சிறுவர் பூங்காவையும் அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வருடாந்த ஏற்பாடுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(vi) இந்த சிறுவர் பூங்காக்களை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சு தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகளும் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

496/ ' 19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் கங்க இஹல கோரளைப் பிரதேச செயலகப் பிரிவில் வாழ்கின்ற மக்கள் கடும் நீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இப்பிரிவில் அமைந்துள்ள ராக்ஷாவ, அசு பினி எல்ல போன்ற நீரேந்து பிரதேசங்களினால் மா ஒய உருவாகியுள்ளதென்பதை அவர் அறிவாரா எனவும்;

(iii) மேற்படி நீரேந்து பிரதேசங்களினூடாக ஓடிச் செல்கின்ற மா ஒயவை பயன்படுத்தி அரனாயக்க மற்றும் மாவனெல்ல தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு நீர் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) நீர் இல்லாமையினால் அவதிப்படும் கங்க இஹல கோரளை மக்களுக்கு முதலாவதாக நீர் வழங்கி ஏனைய தொகுதிகளுக்கு நீர் வழங்குவது நியாயமானதல்ல என்பதையும்;

(v) பிரச்சினை ஏற்படாதவாறு கங்க இஹல கோரளை மக்களுக்கு நீர் வழங்கி அரனாயக்க மற்றும் மாவனெல்ல மக்களுக்கு நீர் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

567/ '19

கௌர துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நெல் விற்பனை சபைக்கு கிடைத்த இலாபம்/ நட்டம் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இக்காலத்தில் ஒவ்வொரு போகத்திலும் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்ட அளவு ஒவ்வொரு மாவட்ட மற்றும் ஆண்டு அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இக்காலத்தில் நெல் விற்பனை சபை நட்டம் அடைந்திருப்பின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

595/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 286 இன் பிரகாரம், அரச பிணையங்கள் சந்தை அபிவிருத்திக்காக "முறிகள் தீர்ப்பனவு" நிறுவனமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் சந்தைப்படுத்தல் கட்டமைப்பொன்றைத் தாபிப்பதற்காக அரசாங்க திரட்டு நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 500 மில்லியன் பயன்படுத்தப்பட்ட விதத்தை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(iii) 2015 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நடத்தை எவ்வாறு அமைந்திருந்தது என்பதையும், இவர்களால் ஒவ்வொரு வருடத்திலும் மீளப்பெறப்பட்ட முதலீடுகளின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர்களில் எவ்வளவென்பதையும்;

(iv) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இலங்கையின் பிணையங்கள் சந்தையின்பால் ஈர்த்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

597/ '18

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன,— பிரதம அமைச்சரும் தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி வலயங்களில் காணிகளை வழங்குவதற்காக பொலன்னறுவை மாவட்டத்தின் மெதிரிகிரிய போன்ற பிரதேசங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மகாவலி வலயத்தில் காணிகளை வழங்குவதற்காக கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவ்வாறான விண்ணப்பங்களிலிருந்து காணிகளை வழங்குவதற்குப் பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்ய பின்பற்றப்படும் வழிமுறை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2019 யூன் 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

30/ '18

கௌரவ ஹேசா விதானகே,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் கடற்றொழில் துறையின் அபிவிருத்திக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) 2005 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை கடற்றொழில் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) அவ்வாறு ஒதுக்கப்பட்ட தொகை அந்தந்த ஆண்டுகளுக்குப் போதுமானதாக இருந்ததா;

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

86/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரச மருத்துவமனைகளில் பணியாற்றும் தாதி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தாதி உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவும் மருத்துவமனைகள் யாதென்பதையும்;

(iii) தற்போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வெற்றிடங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மருத்துவமனைகளில் நிலவும் தாதி உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் அசௌகரியத்திற்கு உள்ளாவதை இயன்றளவு குறைப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோருவதற்கு ஏற்கெனவே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தாதி உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகைமைகள் யாவையென்பதையும்;

(iii) வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருப்பின் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

145/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் மண் சரிவு ஆபத்துக்கு உள்ளாகக்கூடியதென தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தினால் இனங்காணப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்விடங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அந்த ஆபத்தான இடங்களில் வாழும் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

210/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, லபுதூவ உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தற்போது பயில்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த மாணவர்களுக்காக விடுதியொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எந்த இடத்தில் என்பதையும்;

(iv) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி விடுதியை நிர்மாணித்து முடிப்பதற்கு எடுக்கப்படும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

263/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் குருணாகல் மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

344/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பட்டதாரி ஆசிரியர் நியமனங்களின் போது பட்டதாரிகளின் பாட விடயப்பரப்புக்கு ஏற்புடையதல்லாத நியமனங்கள் வழங்கப்படுவதால் மேற்படி ஆசிரியர்கள் பாடசாலையில் தமக்கு கிடைக்கும் பாடத்தை கற்பிப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் பாடங்களை மாற்றுவதற்கு யாதேனுமொரு நடைமுறை உள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கு வழங்கக்கூடிய தீர்வு யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

430/ '19

கௌரவ கனக ஹேரத்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத சேவைக்கு உரித்தான புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ள புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில், அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள புகையிரத நிலையங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

540/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை விமானப் படையின் எயார் வைஸ் மார்ஷல் திரு.கே.ரீ.பீ.பீ.ஜயம்பதி அவர்கள் 2008.01.08 ஆம் திகதி சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்டு தமது வாகனத்தை சுங்கத்திலிருந்து விடுவித்துக் கொண்டுள்ளார் என்பதையும்;

(ii) குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு மீண்டும் சலுகை அடிப்படையில் வாகனமொன்றை இன்னும் 5 வருடங்களின் பின்னரே பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளபோதிலும் மேற்படி அனுமதிப்பத்திரம் பற்றிய தகவல்களைப் போலியாகக் குறிப்பிட்டு 2011.01.14 ஆம் திகதி முன்னாள் விமானப் படைத் தளபதியினதும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரினதும் விதப்புரைகளுடன் மீண்டும் சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக விண்ணப்பப்படிவமொன்றைச் சமர்ப்பித்து 2011.06.07 ஆம் திகதி உரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்துள்ளார் என்பதையும்;

(iii) அதன் பிரகாரம் அவர் சுற்றறிக்கை நியதிகளை மீறியுள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) சுற்றறிக்கை நியதிகளுக்கு எதிராக சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை தருவிப்பதற்காக குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு விதப்புரை செய்தமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கும் விமானப் படைத் தளபதிக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியான நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

568/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கேற்ப தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) பவுசர் மூலம் நீர் வழங்கப்பட்ட மற்றும் வரட்சி நிதியுதவி பெற்றுக்கொடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கேற்ப தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) குருணாகல் மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்க அமைச்சு மேற்கொள்ளவுள்ள வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

600/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிலியந்தலையில் பிராந்திய அலுவலகத்தில் சேவையாற்றிவருகின்ற மேன்பவர் ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(ii) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேன்பவர் ஊழியர்களின் சேவை அவசியமாக உள்ள நிலையில் அவர்கள் குறைந்த சம்பளத்திற்கு சேவையில் ஈடுபடுத்தப்படுவது முறையற்ற விதத்தில் ஊழியத்தைப் பெற்றுக் கொள்வதாக இருக்காதா என்பதையும்;

(ii) மேற்படி மேன்பவர் ஊழியர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ளப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பில் அவர்களுக்கு கணக்கு அறிக்கைகள் ஏன் பெற்றுக் கொடுக்கப்படுவதில்லை என்பதையும்;

(iii) மேற்படி ஊழியர்களை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

628/ '18

கௌரவ விமலவீர திசாநாயக்க,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் நீர்ப்பற்றாக்குறை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளின் பரப்பளவு யாது;

(ii) அவ்வாறு நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாதுபோன காணிகளைக் கொண்ட விவசாய குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமா;

(iii) இன்றேல், மேற்படி விவசாய குடும்பங்களுக்கு நியாயமான பிறிதொரு நிவாரணத்தை வழங்குவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

630/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு தேசிய சுவடிகூடத் திணைக்களத்தில் வெற்றிடமாகியுள்ள பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பதவிக்கும் வெற்றிடம் ஏற்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்ப இது வரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

638/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்குப் பொறுப்பான முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபரினால் சனாதிபதிக்கு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்ற சதித் திட்டம் தொடர்பில்,

(i) மேற்படி பொலிஸ் மாஅதிபரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவரின் அலுவலகம், வீடு மற்றும் கையடக்கத் தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஊழல் எதிர்ப்பு படையணியின் நடவடிக்கைப் பணிப்பாளர் என்று கூறப்படுகின்ற திரு. நாமல் குமாரவுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுவதனால், அது தொடர்பிலான உண்மைத்தன்மையை கண்டறியும் வரை, அவரின் பாதுகாப்பு எவ்வாறு உறுதி செய்யப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) எதிர்கால சட்ட நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படாதவாறு இந்த சம்பவத்தின் தற்போதைய நிலைமை எவ்வாறானது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) சனாதிபதியின் பாதுகாப்பை அவரின் விருப்பத்திற்கு அமைய தீர்மானிக்க முடியுமாயினும், முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர், கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோரின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

674/ '18

கௌரவ சந்திம கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் கெக்கிராவை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் இலக்கம் 635 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மஹவெவ பாலம் பழுதடைந்துள்ளதென்பதையும்;

(ii) அப்பாலத்தினை மறு சீரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடுகளைக்கோரி வடமத்திய மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரினால் மதிப்பீடொன்று தங்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) அமைச்சின் செயலாளர் இதுவரை நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுத் தரவில்லையென்பதையும்;

(iv) எதிர்வரும் மழை காலத்தில் மஹவெவ பாலம் அழிவடையும் பட்சத்தில் 8 கிராமங்களில் வாழும் சுமார் 7000 விவசாய மக்கள் போக்குவரத்துச் சிரமங்களுக்கு உள்ளாகி நிர்க்கதி நிலைக்கு உள்ளாவார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தினை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில் அதற்காக எடுக்கப்படும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

945/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் மடிகே, உடதலவின்ன, பன்சல வீதி, இலக்கம் 7/3 எனும் இடத்தில் வதியும் செல்வி எப். சிபா முழுமையான அங்கவீனமுற்ற நிலையில் காணப்படுகின்றார் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 15 வயதினைக் கொண்ட அவருக்கு அங்கவீனமுற்றோருக்காக வழங்கப்படும் மருத்துவ உதவி/மாதாந்த நிதி உதவி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) இது சம்பந்தமாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் MSS/2017/WZ/07 இலக்க மற்றும் 2017.07.04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வயது முதிர்ந்த ஆட்களுக்கான தேசிய மன்றச் செயலகத்தின் பணிப்பாளர் அறிவூட்டப்பட்ட போதிலும் மேற்படி நிதி உதவி வழங்கப்படுதல் தாமதப்படுத்தப்பட்டு வருகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், செல்வி சிபாவிற்கு தாமதமின்றி மேற்படி நிதியுதவியினைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2019 யூன் 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

38/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹியங்கனை நகரத்தின் புத்தகயா மாதிரி உருவ அமைப்புக்கு அருகில் தற்காலிகமாக நடாத்தப்பட்டுவருகின்ற வாரச் சந்தை மழை நாட்களில் மிகவும் அசுத்தமடைகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மஹியங்கனை வாரச் சந்தையை துரிதமாக அபிவிருத்திச் செய்ய அமைச்சு மேற்கொள்கின்ற நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

87/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வொக்ஸ்வெகன் கைத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்ட திகதி மற்றும் இடம் என்பன யாவையென்பதையும்;

(ii) அதற்காக ஒதுக்கப்பட்ட காணியின் பரப்பு யாதென்பதையும்;

(iii) தற்போது நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில் அந்நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(v) குறிப்பிட்ட நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு உற்பத்திச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(vii) இன்றேல், அதற்கான காரணங்கள் குறிப்பிடப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

146/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா பரணகம தேர்தல் தொகுதியில்,

(அ) (i) பல கிராமங்கள் சிறுத்தைகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தக் கிராமங்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) அந்தக் கிராமங்களை சிறுத்தைகளின் அச்சுறுத்தல்களிலிருந்து மீட்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

211/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்சார சபை, ஏஸ் எம்பிலிப்பிட்டிய மின் வலு நிலையத்திலிருந்து மின் கொள்வனவை ஆரம்பித்த திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதிக்குள் குறித்த மின் வலு நிலையத்திலிருந்து ஒரு அலகு மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்ட விலை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி முழுக் காலப்பகுதிக்குள் ஏஸ் எம்பிலிப்பிட்டிய மின் வலு நிலையத்திற்கு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி மின் வலு நிலையத்திற்கு உரிமையாளரான கம்பனி முதலீடு செய்துள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 10 வருடங்கள் மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்ட பின்னர் உடன்படிக்கை நீடிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) உடன்படிக்கையை நீடித்தமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) அதற்காக மக்கள் உபயோக ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி அங்கீகாரத்தின் பிரதியை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) ஏஸ் எம்பிலிப்பிட்டிய மின் வலு நிலையத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள சகல உடன்படிக்கைகளும் சபையில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

264/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கேகாலை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

345/ ’18

கௌரவ இஷாக் ரஹுமான், — கல்வி அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாணத்திலுள்ள பெருமளவிலான பாடசாலைகளில் இஸ்லாம் சமயத்தையும் பௌத்த பாடத்தையும் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

431/ '19

கௌரவ கனக ஹேரத்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் முக்கியமானதொரு பொதுச் சேவையாக அமையும் புகையிரத போக்குவரத்துச் சேவை, புகையிரதங்கள் உரிய நேரத்தில் உரியவாறு பயணிக்காமை மற்றும் அதிகமான பயணிகள் நெரிசலைக் கொண்டு காணப்படுதல் ஆகிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) இலங்கை புகையிரத திணைக்களத்துக்கு உரித்தான, பிரயாணத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் காணப்படும் புகையிரதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இதன் மூலம் இலங்கையின் சகல புகையிரத போக்குவரத்து தேவைகளையும் நிறைவேற்றிக்கொள்ளக் கூடியதாக உள்ளதா என்பதையும்;

(v) 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர், புகையிரத சேவையில் புதிய இயக்கு வலுத் தொகுதிகள் சேர்க்கப்பட்டிருப்பின், அவை யாவை என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

545/ ’19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 70 வயதுக்கு மேற்பட்ட பிரசைகளுக்கு செலுத்தப்படுகின்ற முதியோர் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்துள்ள பலருக்கு இற்றைவரை அக் கொடுப்பனவு கிடைக்கவில்லை என்பதையும்;

(ii) இது தொடர்பாக பிரதேச செயலகங்களிடம் வினவும் போது தற்போது கொடுப்பனவை பெறுகின்றவர்களில் ஏற்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் எஞ்சியோருக்கு கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போதைய விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் அமைச்சுப் பதவியை ஏற்ற பின்னர் முதியோர் கொடுப்பனவு வழங்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஏற்கெனவே விண்ணப்பித்துள்ள நிலையில் இதுவரை அக்கொடுப்பனவு கிடைக்காத முதியோர்களுக்கு அக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இந்த கௌரவ சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

569/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் குருநாகல் மாவட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நோயாளர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கேற்ப எவ்வளவென்பதையும்;

(iii) இந்நோயாளர்களுக்கு தேவையான சுகாதார வசதிகள் மற்றும் வேறு வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள வழிமுறைகள் யாவை என்பதையும்;

(iv) குருணாகல் மாவட்டத்தில் வேகமாக பரவும் சிறுநீரக நோயை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் செயன்முறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

601/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தரப்படுத்தலில் முதலிடத்தை பிடித்திருந்த சுயாதீன தொலைக்காட்சி சேவை இன்றளவில் ஆறாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்குஅறிவிப்பாரா?

(ஆ) (i) 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் வருடாந்த வருமானம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தை விற்பதற்கான செயற்பாடொன்று திட்டமிடப்படுகின்றதா என்பதையும்;

(iii) இந் நிறுவனத்தில் ஊழியர்களுக்கான சம்பளம் நிலையான வைப்புக்களிலிருந்து செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

629/ '18

கௌரவ விமலவீர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின், மஹஓயா பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ரம்புக்கன் ஓயா நீர்த்தேக்க கருத்திட்டத்தின் கீழ் 2018 சிறுபோகத்தின் போது நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட காணிகளின் பரப்பளவு யாது என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கக் கருத்திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் நீர்ப்பாசன நீர் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் சாத்தியப்பாடு காணப்படும் காணிகளின் பரப்பளவு யாது என்பதையும்;

(iii) அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

631/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1947 ஆம் ஆண்டு முதல் 2000 வரையில் இலங்கை பிரசாவுரிமை வழங்கப்பட்டுள்ள இந்திய அல்லது பாகிஸ்தான் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

756/ '19

கௌரவ ரொஷான் ரணசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை றோயல் கனிஷ்ட வித்தியாலயத்தில் 5 ஆம் ஆண்டு சித்தியடைந்த மாணவர்களை பொலனறுவை றோயல் மத்திய மகா வித்தியாலயத்தில் 6 ஆம் தரத்தில் சேர்த்துக்கொள்ளாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) றோயல் கனிஷ்ட வித்தியாலயத்தில் 5 தரம் வரை கல்வி பயின்ற மாணவர்களுக்கு அவர்களது எதிர்கால பாடசாலைக் கல்வி தொடர்பாக வழங்கப்படும் தீர்வு யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) றோயல் கனிஷ்ட வித்தியாலயத்தில் 5 ஆம் தரம் சித்தியடைந்த மாணவர்களை கனிஷ்ட வித்தியாலயதிலேயே மேலதிக கல்விக்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதற்காக அந்த வித்தியாலயத்தின் ஏனைய வசதிகளை மேம்படுத்துவதற்கான துரித மற்றும் நீண்டகால திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

761/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கலாநிதி ஐ.எச்.கே மஹாநாம, காணி அமைச்சின் செயலாளர் பதவியை வகிக்க முன்னர் பிரதம அமைச்சரின் மேலதிக செயலாளர் பதவியை வகித்துள்ளார் என்பதையும்;

(ii) இக்காலத்தில் பிரதம கணக்கீட்டு அலுவலராக அமைச்சின் கேள்விப் பத்திர சபைகளில் தீர்மானங்களை மேற்கொள்வதில் மாத்திரமின்றி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபைகளிலும் பணியாற்றியுள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஔடத இறக்குமதி முதலிய அலுவல்கள் பற்றி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபைகளில் தவிசாளர்/உறுப்பினராக கலாநிதி மஹாநாம பணியாற்றியுள்ள காலவரையறை மற்றும் வகித்துள்ள பதவிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கேள்விப்பத்திர சபைகளுக்கு கேள்விகளை சமர்ப்பித்துள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தவிசாளர், முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விப் பத்திரங்களில் அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களுக்குரிய நிறுவனங்கள் மற்றும் விலைகள் யாவை என்பதையும்;

(iv) கலாநிதி மஹாநாமவின் தலைமையிலான அல்லது பங்கேற்புடைய கேள்விப்பத்திர சபைகளின் அங்கீகாரத்துடன் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள ஔடத வகைகள், அளவுகள் மற்றும் நாடுகள் யாவை என்பதையும்;

(v) 2010 ஆண்டு தொடக்கம் இற்றைவரை சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் அமைச்சரவை கேள்விப் பத்திர சபை கூடிய திகதிகள் மற்றும் அதன் அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

769/ '19

கௌரவ விதுர விக்கிரமநாயக்க,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வறையறுக்கப்பட்ட கிழக்கு ஹேவாகம் கோரலே பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின், கிராமிய வங்கி கிளைகளில் வைப்பிலிடப்பட்டிருந்த ரூ. 54 கோடி பணம் தொடர்பாக நடந்துள்ள மோசடி காரணமாக கூட்டுறவு சங்கத்திற்கு அப்பிரதேச மக்களின் அன்றாட வாழ்க்கை மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற சேவைகள் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) சேமிப்புப் பணத்தை பெற முடியாமையினால் சேமிப்பாளர்களும் கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர்களும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி நிலைமை காரணமாக பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஊழியர்கள் தொழில்களைக் கூட இழந்துவிட வாய்ப்புள்ளதென்பதையும்;

(iv) மேற்படி ஊழல் காரணமாக நாளுக்கு நாள் உரிய சேவைகள் துண்டிக்கப்படுவதால் கூட்டுறவு அமைப்பு வீழ்ச்சியை நோக்கிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நெருக்கடியை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 யூன் 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010 -2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் ஆரம்பிக்கப்பட்ட கிராம எழுச்சி வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த வீடமைப்புக் கருத்திட்டங்களின் வீடு பெறுனர்களை தெரிவு செய்வதற்கு பின்பற்றப்பட்ட முறையியல் யாது;

(iii) குறிப்பிட்ட கருத்திட்டங்கள் ஊடாக பயனாளிகளாக நிவாரணம் கிடைத்தோரின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஊடாக நாட்டில் வீடற்ற மக்களுக்காக போதியளவு ஒத்துழைப்பினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

89/ '18

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த நுகர்வுக்கு தேவையான பெரிய வெங்காயத்தின் அளவு எத்தனை மெட்ரிக் தொன் என்பதையும்;

(ii) அவற்றில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அளவு எவ்வளவென்பதையும்;

(iii) உள்நாட்டில் பெரிய வெங்காயம் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) பெரிய வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) பெரிய வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படும் காணியின் அளவு எவ்வளவென்பதையும்;

(vi) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையான வருடாந்த பெரிய வெங்காய அறுவடை ஒவ்வொரு வருடத்துக்கமைய எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பெரிய வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை வலுவூட்டுவதற்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(ii) பெரிய வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை வலுவூட்டுவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

138/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்தில், பெருந்தோட்டக் கம்பனிகளைச் சார்ந்ததாக சேவையாற்றுகின்ற ஊழியர்களிலும் அவர்களின் குடும்பங்களிலும் போசாக்கின்மை உயர் மட்டத்தில் காணப்படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) நல்லாட்சி அரசாங்கத்தினால் மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்காக வழங்கப்படுகின்ற "போசாக்குப் பொதி" வேலைத்திட்டத்திற்கு இணையாக, பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாகவும் மேற்படி மக்களுக்கு போசாக்குப் பொதியொன்றை பெற்றுக் கொடுத்தல் பொருத்தமாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாக அத்தகைய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

207/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பாணந்துறை வேகட ஜன உதானகம கிராமத்தில் வீடுகளைப்பெற்ற பயனாளிகள் 35 பேர் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் அந்த இடத்தில் வசிக்கின்றனர் என்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டு அப்போதைக்கு நகர சபை உறுப்பினராக இருந்த திரு பியசேன பர்னாந்துவினால் வீடுகளைப்பெற்ற பயனாளிகளுக்கு சட்டப்படியான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டுமென பாணந்துறை நகரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டு பாணந்துறை நகர சபையினால் நில அளவைக் கட்டளையொன்றைப் பெற்று அந்தக் காணிகளை அளந்து உறுதி பத்திரங்களை வழங்க தயார் நிலையில் இருந்ததையும்;

(iv) 2018 ஆம் ஆண்டு மே மாதம் தற்போதய பாணந்துறை நகரச் சபை மீண்டும் அந்த யோசனையை ஏகமனதாக நிறைவேற்றியது என்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) வேகட ஜன உதானகம வீடுகளைப்பெற்ற பயனாளிகளுக்கு இதுவரை சட்டப்படியான உறுதிப்பத்திரங்கள் கிடைக்கவில்லை என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) அந்த வீடுகளைப்பெற்ற பயனானிகளுக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்கும் திகதி யாது என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

265/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் புத்தளம் மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

346/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் மஹாவலி H வலயத்தில் அமைந்துள்ள கல்னேவ பேரூந்துத் தரிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அது பாவனையாளர் மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் திருத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

409/ '18

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில்,

(i) இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து ஈட்டிக்கொள்ளப்பட்டு நாட்டிலிருந்து வெளியில் கொண்டுசெல்லப்பட்டுள்ள இலாபத்தின் அளவானது ஐக்கிய அமெரிக்க டொலர்களில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாறு பணம் வெளியில் கொண்டு செல்லப்பட்டதன் காரணமாக ரூபாயின் பெறுமதி மீது ஏற்பட்டுள்ள தாக்கம் எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு முதலீட்டின் மூலமும் இலங்கைக்கு தொழில் ரீதியாக கிடைக்கப்பெற்ற அனுகூலம் மற்றும் வேறு அனுகூலங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

453/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வயது முதிர்ந்த ஆட்களுக்கான தேசிய பேரவை மற்றும் வயது முதிர்ந்தோர் தேசிய செயலகத்தின் கடமைகள் யாவையென்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டில் பொதுமக்கள் நலநோம்புகைக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இலங்கையின் முதியோர் சனத்தொகை அதிகரிக்கின்றது என்பதையும்;

(ii) முதியோர் சனத்தொகையில் பெரும்பாலானவர்களுக்கு வாழ்வதற்கு எத்தகைய வருமானமும் இல்லை என்பதையும்;

(iii) இவர்களுக்கு வருமானம் பெறும் வழிமுறைகள் தொடர்பான அறிவு போதுமானதாக இல்லை என்பதையும்;

(iv) பிள்ளைகள் அவர்களை பராமரிகாமல் கைவிடுவதன் காரணமாக அவர்கள் அநாதரவாகியுள்ளனர் என்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், அதற்கான தீர்வுகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

516/ '19

கௌரவ இந்திக்க அனுருத்த ஹேரத்,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை யாது;

(ii) 2014.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு தேசிய வீடமைப்பு அதிகாரசபையில் பணிபுரியும் நிரந்தர, அமய, விசேட கருத்திட்ட மற்றும் பயிலுனர் பணியாட்டொகுதி எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையில் பணிபுரியும் நிரந்தர, அமய, விசேட கருத்திட்ட மற்றும் பயிலுனர் பணியாட்டொகுதி எண்ணிக்கை வெவ்வேறாக யாது ;

(iv) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு குறிப்பிட்ட ஒவ்வொரு பணியாட்டொகுதியிலும் பணிபுரிபவர்களின் பெயர், முகவரி, வதியும் கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவை உள்ளடங்கிய ஆவணமொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

541/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 150,000 சலுகை விலைக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி மோட்டார் சைக்கிள்களை வழங்குகையில் எவ்விதமான நிபந்தனைக்கும் கட்டுப்படுத்தவில்லை என்பதையும்;

(iii) ஆயினும் பெரும்பாலும் மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொண்ட பொலிசு உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் ரூபா 150,000 - ரூபா 200,000 இடைப்பட்ட பணத்தொகையைச் செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அப்பணத்தொகையைச் செலுத்தும்வரை ஓய்வூதியம் செலுத்துதல் ஆரம்பிக்கப்படமாட்டாதென அவர்களின் சேவை நிலையங்களிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும் ;

(v) இதற்கிணங்க இளைப்பாறிய பெருந்தொகையான பொலிசு உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக ஓய்வூதியம் கிடைக்காமையால் நிர்க்கதி நிலையிலுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தும்பொருட்டு தாமதமின்றி பொருத்தமான முறையியலொன்றை வகுப்பாரா;

(ii) ஆமெனில் அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

570/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கைக்கு பால்மா இறக்குமதி செய்யப்படுவதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில், தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கைக்கு பால்மா இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் உற்பத்திகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

633/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1948 முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் பல்வேறுபட்ட ஒப்பந்தங்கள் மற்றும் சட்டங்களின் கீழ் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு குடியமர்வதற்காக சென்றவர்களின் அல்லது அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை;

(ii) 1983 முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் அகதிகளாக இந்தியாவுக்கு சென்றவர்களின் எண்ணிக்கை;

(iii) 2009 முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் அகதிகளாக இந்தியாவுக்கு சென்றவர்களில் மீண்டும் இலங்கைக்கு திரும்பியவர்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

681/ '18

கௌரவ கனக ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விமானமும் பயன்படுத்தப்பட்டுள்ள காலம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) குத்தகை ஒப்பந்தம் நிறைவடைந்த பின்னர் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு மீண்டும் பெற்றுக்கொடுக்கப்பட்ட விமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள காலம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வாறு மீண்டும் பெற்றுக்கொடுக்கப்பட்ட விமானங்களை விட பழைய விமானங்கள் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் குத்தகை அடிப்படையில் இன்னும் பயன்படுத்தப்பட்டுவருகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனின், இவ்வாறு பழைய விமானங்களை இற்றைவரையில் வைத்திருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இதற்குரிய பிரமாணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

762/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இதுவரை திருகோணமலை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வீடமைப்பு நிதியுதவி, வீட்டுக்கடன் மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல் மற்றும் வீடமைப்பு முதலிய நிகழ்ச்சிகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) "கிராம சக்தி" என்ற பெயரிலான ரூபா 5 இலட்ச வீடமைப்பு நிதியுதவி நிகழ்ச்சித்திட்டமானது திருகோணமலை மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(ii) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக பயனாளிகளை தெரிவு செய்யும் முறையியல் மற்றும் இதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள் யாவை என்பதையும்;

(iv) இந்நிகழ்ச்சியின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிற்கு அமைவாக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(v) இதற்காக சில அரசியல் கட்சிகளின் அமைப்பாளர்களின் கடிதங்களுக்கு அமைவாக பயனாளிகள் தெரிவு செய்யப்படுவதாக முறைப்பாடு கிடைப்பதால் இது பற்றி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

770/ '19

கௌரவ சாந்த பண்டார,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் மாகாண சபைகளில், உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்ததன் காரணமாக தற்போது கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) கலைக்கப்பட்டுள்ள (உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்துள்ள) மாகாண சபைகள் கலைக்கப்பட்டது முதல் கடந்துள்ள காலப்பகுதி வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கு மேலதிகமாக, எஞ்சியுள்ள மாகாண சபைகளின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைவதற்கு உள்ள காலப்பகுதி வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) கலைக்கப்பட்டுள்ள மேற்படி மாகாண சபைகளின் தேர்தலை நடாத்தி, அம் மாகாண சபைகளை தொழிற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?